தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 12.11.2013

### இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு: முதல்வருக்கு எம்எல்ஏ கோரிக்கை

கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு, இழப்பீடு வழங்க வேண்டும் என சிதம்பரம் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்து கடிதம் அனுப்பியுள்ளார்.

கடித விவரம்: வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு பரவி வரும் கோமாரி நோய் மற்றும் வாய்ப்புண் நோயால் கடலூர் மாவட்டத்தில் குறிப்பாக பரங்கிப்பேட்டை, குமராட்சி, காட்டுமன்னார்கோயில், புவனகிரி, கீரப்பாளையம் ஆகிய ஒன்றியங்களில் பல நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகள் திடீரென சுருண்டு விழுந்து இறந்துள்ளன. இந்த இழப்பால் விவசாய குடும்பங்கள் கவலை அடைந்துள்ளன.

மேலும் சில இடங்களில் இறந்த மாடுகளை பிரேத பரிசோதனை செய்யாமல் மக்கள் புதைத்துள்ளனர். இதனால் இறப்பு எண்ணிக்கை அரசின் கணக்கெடுப்பில் வராமல் உள்ளது. எனவே, கால்நடைகளுக்கு பரவிவரும் நோயை கட்டுப்படுத்த வேண்டும். இறந்த கால்நடைகள் குறித்து முறையான கணக்கெடுப்பு நடத்தி உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என அதில் தெரிவித்துள்ளார்.

### கரும்பு கொள்முதல் விலையை மறு பரிசீலனை செய்ய வேண்டும்

கரும்பு கொள்முதல் விலையை மாநில அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று, முன்னாள் பிரதமர் தேவகௌடா வலியுறுத்தினார்.

இதுகுறித்து பெங்களூருவில் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கரும்பு கொள்முதல் விலையை ஒரு டன்னுக்கு ரூ.2,500-ஆக மாநில அரசு நிர்ணயித்துள்ளது. கரும்பு விவசாயிகளின் நலன் கருதி இந்தக் கொள்முதல் விலையை மாநில அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். கரும்பு கொள்முதல்

விலையை ஒரு டன்னுக்கு ரூ.3,500-ஆக நிர்ணயிக்க விவசாயிகள் கோரிக்கை வைத்திருப்பதில் தவறு இல்லை.

விவசாயிகளுக்கு லாபம் தராவிட்டாலும், உற்பத்திச் செலவையாவது தர வேண்டியது அரசின் கடமையாகும்.

கரும்பு விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலைகளின் நலன் முக்கியம்.

சர்க்கரை ஆலைகளுக்கு மாநில அரசு ஏராளமானச் சலுகைகளை அளித்துவந்துள்ளது.

சர்க்கரை தவிர கரும்புக் கழிவுப் பொருள், எரி சாராயம், மின் உற்பத்தி போன்ற துணை வருவாய் ஆதாரங்கள் சர்க்கரை ஆலைகளுக்கு இருக்கின்றன.

ஆனால், விவசாயிகளுக்கு உற்பத்திப் பொருளை ஈடு செய்ய வேறு வழியில்லை. கரும்புக்கு கொள்முதல் விலை நிர்ணயிக்க வலியுறுத்தி பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் எழுதுவேன்.

5 மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல் நடந்த பிறகு, வேளாண் விளை பொருள் விலை நிர்ணயக் கொள்கையை வகுக்கும்படி பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து வலியுறுத்துவேன்.

கரும்பு விவசாயிகளுக்கு ஆதரவாக வீதியில் இறங்கி நான் போராட்டம் நடத்தினால், அரசியல் செய்வதாக விமர்சிப்பார்கள். எனவே, வீதியில் இறங்கி போராட்டம் நடத்தி வரும் கரும்பு விவசாயிகளுக்கு எனது ஆதரவு உண்டு என்றார் அவர்.

**நவ. 30-ல் கீரமங்கலத்தில் தென்னை விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்**

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் நவ. 30-ம் தேதி மாவட்ட தென்னை விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டையில் ஞாயிற்றுக்கிழமை இந்திய விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஜி.எஸ். தலைமையில், பரவாக்கோட்டை தென்னை விவசாயிகள் சங்கத் தலைவர் ஆ. கருப்பையா முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள்:

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை இணை அமைச்சர் இ.எம். சுதர்சனநாச்சியப்பனின் வழிகாட்டுதலின் அடிப்படையில் நவ. 30-ம் தேதி கீரமங்கலம் விஆர்கே. திருமண மகாலில் நடைபெறவுள்ள இந்திய தென்னை வளர்ச்சி வாரியக் கண்காட்சி கருத்தரங்கில் விவசாயிகளைக் கலந்துகொள்ளச் செய்வது.

மாவட்டம் முழுவதும் 10 தென்னை மரங்களுக்கு மேலாக வைத்துள்ள விவசாயிகளை அவரவர் புல எண்களில் வருவாய்த்துறை அடங்கலில் பதிவு செய்து, விவசாயிகளுக்கு அரசின் மானியங்களை பெற்றுத் தருவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் அறந்தாங்கி தென்னை விவசாயிகள் நலச் சங்கத் தலைவர் ப. செல்லத்துரை, முன்னோடி தென்னை விவசாயிகள் பாரதி, கறம்பக்காடு காமராஜ், கீரமங்கலம் ரவி, புல்வயல் பி. தங்கராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கோமாரி நோயால் பாதிக்கப்படும் மாடுகளுக்கு சிகிச்சை அளிக்க 124 குழுக்கள் அமைப்பு

தஞ்சாவூர் மாவட்டத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்படும் மாடுகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக 124 கால்நடை மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.

கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஆகிய ஒன்றிய பகுதிகளில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு அளிக்கப்பட்ட தீவிர சிகிச்சைகளையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் ஆய்வு மேற்கொண்ட பின் அவர் தெரிவித்தது:

மாவட்டத்தில் 3,34,991 கால்நடைகள் உள்ளன. இவற்றில் 3,33,250 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. மேலும், கோமாரி நோய்க்குத் தேவையான அனைத்து மருந்துகளும் இருப்பில் உள்ளன. இப்பகுதிகளில் 124 மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுகளில் தலா 4 கால்நடை

அலுவலர்களும், 1 கால்நடை மருத்துவரும் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளுக்குத் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

எனவே, கோமாரி நோய் பற்றி தகவல் கிடைத்த உடன் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு இந்தக் குழுவினர் சிகிச்சை அளித்து வருகின்றனர். டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வுவை மக்களிடையே ஏற்படுத்தியது போல் கோமாரி நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நவ. 15-ம் தேதி சிறப்பு கிராம சபை கூட்டத்தை மாவட்டத்தில் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

ஆய்வின் போது, கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் செல்வவிநாயகம், உதவி இயக்குநர் டேவிட், கும்பகோணம் சார் ஆட்சியர் மந்திரி கோவிந்தராவ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**சீர்காழியில் இன்றுகால்நடைகளுக்கு இலவச மூலிகை மருந்து அளிக்கும் முகாம்**

சீர்காழியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பு மூலிகை மருந்து அளிக்கும் முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. சீர்காழி ரோட்டரி சங்கம் சார்பில், எல்.எம்.சி. பள்ளி விளையாட்டு மைதானத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. கால்நடை வளர்ப்பவர்கள் மூலிகை மருந்தினை வாங்கி தங்கள் கால்நடைகளுக்கு வழங்கலாம். இந்தத் தகவலை சீர்காழி ரோட்டரி சங்கத் தலைவர் எஸ்.கே.ஆர்.எஸ். சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

**முறையான பூச்சிகொல்லி மருந்துகளைக் கையாள அறிவுறுத்தல்**

பருத்திப் பயிரை பூச்சிகள் தாக்குதலில் இருந்து காப்பாற்ற, விவசாயிகள் முறையான பூச்சிகொல்லி மருந்துகளைக் கையாள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து பெரம்பலூர் மாவட்ட வேளாண் துறையினர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பி.டி பருத்தியில் சாறு உறுஞ்சும் பூச்சிகளான இலைப்பேன், தத்துப்பூச்சி மற்றும் அசுவினி தாக்குதல்

பொருளாதார சேத நிலையைத் தாண்டி அதிகளவில் காணப்படுகிறது. இதில், மஞ்சள் நிறத்துடன் காணப்படும் மிகச்சிறிய இலைப்பேன்களும், அதன் குஞ்சுகளும் இலைகளின் மேல், அடிப் பகுதியில் உள்ள பச்சையத்தை அரித்து, இலையின் சாற்றை உறிஞ்சும் தன்மை கொண்டவை. இவற்றின் தாக்குதலால் பருத்தி செடிகளின் இலைகளில் மினுமினுப்பு, நரம்புகளுக்கு அருகே பச்சையம் அரிக்கப்பட்ட வெளிரிய தோற்றம் காணப்படும் . மேலும், வறட்சி நிலவும்போது இலைப்பேன்களின் தாக்குதல் கூடுதலாக இருக்கும். அதேபோல, இலைகளைப் புரட்டி பார்த்தால் அடியில் வெளிர்பச்சை நிறத்தில் தாவிக் குதிக்கும் குஞ்சுகளையும், பறக்கும் பச்சைத் தத்துப் பூச்சிகளையும் காணலாம். தாக்குதலால் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, ஓரங்கள் சிவந்து கீழ் நோக்கி மடியும். இலைகள் நாளடைவில் முழுவதும் பழுப்பு தட்டி சிவப்பாக தீய்ந்தது போலாகும். பூச்சிகளின் தேன் போன்ற சுரப்புகளால் செடி முழுவதும் கருமையாகத் தோற்றமளிப்பதோடு, செடிகளில் எறும்புகளின் நடமாட்டம் காணப்படும். இந்த சாறு உறுஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த, பிப்ரோனில் 200 மில்லி அல்லது தயோமீதாக்செம் 50 கிராம் அல்லது டைபென்தயூரான் 50 கிராம் அல்லது டைமீதோயெட் 200 மில்லி அல்லது, இமிடாகுளோபிரிட் 50 மில்லி, இதில் ஏதேனும் ஒன்றை தெளித்து, பருத்தியை பூச்சிகள் தாக்குதலிலிருந்து காப்பாற்றலாம்.

**கோபியில் ரூ.10 லட்சம் வாழைத்தார்கள் ஏலம்**

கோபியில் வாழைத்தார் ஏல விற்பனை ரூ.10 லட்சத்துக்கு நடைபெற்றது.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாழைத்தார் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், கதளி ஒரு கிலோ ரூ.39-க்கும், நேந்திரன் ரூ.43.60-க்கும் அதிகபட்சமாக ஏலத்தில் விலை போயின. செவ்வாழைத் தார் ரூ.650-க்கும், ரஸ்தாளி ரூ.425-க்கும், ரொபஸ்டிரோ ரூ.400-க்கும், தேன்வாழை ரூ.750-க்கும், பூவன் ரூ.420-க்கும், மொந்தன் 430-க்கும், பச்சைநாடன் ரூ.270-க்கும் அதிகபட்சமாக விலை போயின. மொத்தமாக 9 ஆயிரம் வாழைத்தார்கள் ரூ.10 லட்சத்திற்கு ஏலம் போயின.

தேங்காய் ஏலம்: தேங்காய் ஒன்று அதிகபட்சமாக ரூ.14.50-க்கும், குறைந்தபட்சமாக ரூ.6-க்கும் ஏலம் போயின. மொத்தமாக 8 ஆயிரம் தேங்காய்கள் ரூ.78 ஆயிரத்திற்கு விற்பனையாகின.

**கோமாரியால் இறந்த மாடுகளுக்கு நிவாரணம் வழங்கப்படுமா?**

கோமாரி நோயால் மாடுகளை இழந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையாவிடம் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கோரிக்கை விடுத்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோயால் கால்நடைகள் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளான சித்தோடு அருகே உள்ள சி.மேட்டுப்பாளையம், தயிர்பாளையம், மூலக்கரை உள்ளிட்ட கிராமங்களில் அமைச்சர் சின்னையா திங்கள்கிழமை ஆய்வு செய்தார்.

நோய் பாதிக்கப்பட்டு இறந்த கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டனவா, இதுவரை இறந்துபோன கால்நடைகளின் விவரம் உள்ளிட்டவை குறித்து அவர் விவசாயிகளிடம் கேட்டறிந்தார். அதற்குப் பதில் அளித்த விவசாயிகள், பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு மருத்துவர்கள் தினமும் வந்து தடுப்பூசி போட்டனர். ஆனால், ஒரே மருத்துவரால் அனைத்துக் கால்நடைகளுக்கும் உரிய காலத்தில் ஊசி போட இயலவில்லை என்றனர். கோமாரி பாதிப்பு தொடர்பாக அனைத்து விவரங்கள், வரும் காலத்தில் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அரசுக்குப் பரிந்துரை அனுப்பும்படி கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

ஆய்வின்போது, தமிழக விவசாயிகள் சங்க (கட்சி சார்பற்றது) மாநிலத் தலைவர் கே.சி.ரத்தினசாமி, அமைச்சர் சின்னையாவிடம் கொடுத்த மனுவில், கோமாரி நோயால் மாடுகளை இழந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். ஈரோடு, சீனாபுரம் கால்நடைச் சந்தைகளை உடனடியாக தாற்காலிகமாக மூட வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாடுகளுக்கு ரத்த மாதிரிப் பரிசோதனை செய்ய வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். இக் கோரிக்கைகள் குறித்து முதல்வர் ஜெயலலிதாவின் கவனத்துக்கு கொண்டு சென்று உரிய

நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம், துணைமேயர் கே.சி.பழனிசாமி, கால்நடை பராமரிப்புத் துறை ஈரோடு மண்டல இணை இயக்குநர் ப.வணங்காமுடி, உதவி இயக்குநர்கள் தங்கவேல், மோகன்ராஜ், ஈரோடு கோட்டாட்சியர் வை.குணசேகரன், வட்டாட்சியர் சாகுல் ஹமீது, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் இரா.மனோகரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**முறைநீர்ப் பாசன 2-ஆவது சுற்று அமல்**

பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி பாசனத்திற்கு 2-ஆவது சுற்று முறைநீர்ப் பாசனம் கடந்த சனிக்கிழமை முதல் அமல் செய்யப்பட்டுள்ளது.

கோபி மற்றும் ஈரோடு மேற்கு உபகோட்டத்தில் தண்ணீர் நிறுத்தம் செய்யப்படும் நாள்கள் விவரம்:

தண்ணீர் நிறுத்தப்படும் நாள்கள் (13-ஆம் தேதி புதன்கிழமை காலை வரை): யு-1, யு-2 பாசன சபை மைல் 44 முதல் 82 வரை நேரடி மதகுகள். யு-3பி பாசன சபைக்கு 233 காசிபாளையம் பிரிவு வாய்க்கால் வரை. யு-4 பாசன சபைக்கு 324 நேரடி மதகு வரை. யு-7 பாசன சபைக்கு 340 முதல் 387 வரை நேரடி மதகுகள் வரை. யு-10 பாசன சபைக்கு 517 பி.மேட்டுப்பாளையம் பிரிவு வாய்க்கால் வரை. 531 பவானி பிரிவு வாய்க்காலில் எம்-1 பாசன சபையில் 00 மைல் முதல் 32 மைல் வரை மற்றும் பவானி பெரிய அக்ரஹாரம் பிரிவு வாய்க்கால் 540 நேரடி மதகு வரை.

13-ஆம் தேதி காலைமுதல் 17-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை வரை தண்ணீர் நிறுத்தப்படும் பகுதிகள்: யு-2 பாசன சபைக்கு உள்பட்ட 106, 137, 162 நேரடி மதகுகள் வரை. யு-4 பாசன சபைக்கு 246, 282, 320 நேரடி மதகுகள் வரை. யு-7 பாசன சபைக்கு 357 பிரிவு வாய்க்கால் வரை. யு-8 ஏ, யு-8 பி பாசன சபைக்கு கவுந்தப்பாடி பிரிவு வாய்க்கால் வரை. யு-9 பாசன சபைக்கு 422, 443, 546, 547 நேரடி மதகுகள், எம்-1, எம்-5 பாசன சபைக்கு 565 ஈரோடு பிரிவு வாய்க்காலில் 577 முதல் 596 நேரடி மதகுகள் வரை. எம்-6 பாசன சபைக்கு திண்டல் பிரிவு வாய்க்கால் 605 மற்றும் 621 நேரடி மதகுகள் வரை.

17-ஆம் தேதி காலை முதல் 21-ஆம் தேதி வியாழன் காலை வரை தண்ணீர் நிறுத்தப்படும் பகுதிகள்: யு-4 பாசன சபைக்கு உள்பட்ட 304 கலிங்கியம் பிரிவு வாய்க்கால் வரை. யு-5, யு-6 பாசன சபைக்கு உள்பட்ட 331 கூகலூர் பிரிவு வாய்க்கால் வரை. யு-7 பாசன சபைக்கு 405 நேரடி மதகு வரை. யு-9 பாசன சபைக்கு 464 நேரடி மதகு வரை. ஈரோடு உபகோட்டம் 522 நேரடி மதகு வரை. எம்-2 பி, எம்-3 பாசன சபைக்கு பவானி பிரிவு வாய்க்காலில் மைல் 32 முதல் கடைமடைப் பகுதி வரை மற்றும் மொசக்கரடு பிரிவு வலது கிளை வாய்க்கால் வரை.

பாசன நீரை சிக்கனப்படுத்தும் வகையில் முறை நீர்ப் பாசனம் அமல்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி முழு ஒத்துழைப்புத் தர வேண்டுமென,

கோபி கோட்ட கீழ்பவானி முறை நீர்ப் பாசன விவசாயிகள் சபை பொறுப்பாளர்கள் செங்கோட்டையன், வெங்கடாசலபதி கேட்டுக்கொண்டுள்ளனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 68.89 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 68.89 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,219 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 750 கன அடி நீரும்,

வாய்க்காலில் 1,950 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 10.49 டி.எம்.சி.

**கோபியில் வாழைத்தார் ஏல விற்பனை ரூ.10 லட்சத்துக்கு நடைபெற்றது.**

கோபியில் வாழைத்தார் ஏல விற்பனை ரூ.10 லட்சத்துக்கு நடைபெற்றது.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாழைத்தார் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், கதளி ஒரு கிலோ ரூ.39-க்கும், நேந்திரன் ரூ.43.60-க்கும் அதிகபட்சமாக ஏலத்தில் விலை போயின. செவ்வாழைத் தார் ரூ.650-க்கும், ரஸ்தாளி ரூ.425-க்கும், ரொபஸ்டிரோ ரூ.400-க்கும், தேன்வாழை ரூ.750-க்கும், பூவன் ரூ.420-க்கும், மொந்தன் 430-க்கும், பச்சைநாடன் ரூ.270-க்கும் அதிகபட்சமாக விலை போயின. மொத்தமாக 9 ஆயிரம் வாழைத்தார்கள் ரூ.10 லட்சத்திற்கு ஏலம் போயின.

தேங்காய் ஏலம்: தேங்காய் ஒன்று அதிகபட்சமாக ரூ.14.50-க்கும், குறைந்தபட்சமாக ரூ.6-க்கும் ஏலம் போயின. மொத்தமாக 8 ஆயிரம் தேங்காய்கள் ரூ.78 ஆயிரத்திற்கு விற்பனையாகின.ஈரோடு, நவ.11: அடிப்படை வசதி செய்து தராமல் இழுத்தடிப்பதாக பெத்தாம்பாளையம் பேரூராட்சி நிர்வாகம் மீது புகார் தெரிவித்து, வாயில் கருப்புத் துணி கட்டிக்கொண்டு மாணவ, மாணவிகள் மற்றும் பொது மக்கள் புகார் மனு அளித்தனர்.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை அவர்கள் கொடுத்த மனு விவரம்:

பெருந்துறை அருகே பெத்தாம்பாளையம் பேரூராட்சிக்கு உள்பட்ட பொன்னாண்டவலசு அண்ணா நகரில் 40 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இங்கு, 2000-இல் அமைச்சர், மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் 29 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது.

இந்த இடத்தில் வீடு கட்டிக் குடியிருந்து வருகிறோம். 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்த வீடுகளுக்கு குடிநீர், மின் இணைப்பு, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை பேரூராட்சி நிர்வாகம்

செய்து தரவில்லை. இதனால், பொது மக்கள் மட்டுமின்றி மாணவ, மாணவிகளும் பாதிக்கப்பட்டு

வருகின்றனர். இந் நிலையில், தலித் குடும்பங்கள் ஊருக்குள் இருக்கக் கூடாது எனக் கூறி, இங்கிருந்து எங்களை விரட்ட வேறு சமுதாயத்தினர் முயற்சி செய்து வருகின்றனர்.

இது, தனியாருக்குச் சொந்தமான இடம் எனக் கூறி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். எங்களது வீட்டு மனைகளுக்கு உரிய பாதுகாப்பும், எங்கள் பகுதியில் அடிப்படை வசதியும் செய்து தர வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, பெத்தாம்பாளையம் பேரூராட்சித் தலைவர் பெரியசாமியிடம் கேட்டபோது, அண்ணா நகர் பகுதியில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி உள்ளது. சாக்கடை, வீடுகளுக்கு மின்சார வசதி உள்ளது. தெருவிளக்கு மட்டும் குறைவாக உள்ளது. விரைவில், கூடுதலாக தெருவிளக்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்றார்.

**நெல்பயிருக்கு காப்பீடு: எம்.எல்.ஏ. வலியுறுத்தல்**

பெரியாறு-வைகை பாசன ஒருபோக சாகுபடி விவசாயிகள் நெல்பயிருக்கு

தேசியவேளாண் காப்பீ0்ட்டுத் திட்டத்தில் சேரவேண்டும் என மேலூர் தொகுதி எம்.எல்.ஏ. ஆர்.சாமி விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெரியாறு-வைகை பாசன விவசாயிகள் பருவமழையை எதிர்பார்த்து நெல் பயிரிட்டுள்ளனர். தற்போதைய நிலையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.17 ஆயிரம் வரை செலவிட்டுள்ளனர். நேரடி பாசன நிலங்களில் நெல்பயிரிட்டுள்ள விவசாயிகள், அந்தந்த கிராம வேளாண் தொடக்க கூட்டுறவு வங்கிகளை அனுகி, பயிர் காப்பீடு செய்துகொள்ளவேண்டும்.

அதற்கான படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தலின்பேரில் வேளாண் தொடக்க கூட்டுறவு வங்கிகளில் வழங்கி வருகின்றனர். 2.50 ஏக்கர் நெல் பயிரிட்டுள்ள சிறுவிவசாயிகள் நிலத்தின் சர்வே எண் பயிரின் தன்மை குறித்து கிராம நிர்வாக அதிகாரியிடம் சான்றிதழ்பெற்று காப்பீட்டு படிவத்துடன் இணைத்து, சிறு விவசாயிகள் ரூ.116-ம் 2.50 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகள் ரூ.129-ம் காப்பீட்டுக் கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

இதனால் தேசிய வேளாண் பயிர்காப்பீட்டுத் திட்டத்திலிருந்து ஏக்கருக்கு ரூ.12,944-ஐ இழப்பீடாகப் பெறலாம் என சாமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**நவ.15இல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

ராமநாதபுரம் மாவட்ட ஊராட்சி மன்ற கூட்ட அரங்கில் இம்மாதம் 15 ஆம் தேதி பிற்பகல் 2 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது. ஆட்சியர் க.நந்தகுமார் தலைமையில் நடைபெற உள்ள இந்த கூட்டத்தில் விவசாயிகளும்,விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஆட்சியர் அலுவலகம் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சீர்காழியில் கால்நடைகளுக்கு இன்று  இலவச மூலிகை மருந்து**

சீர்காழி ரோட்டரி சங்கம் சார்பில் நவம்பர் 12ம் தேதி செவ்வாய்கிழமை காலை முதல் எல்.எம்.சி பள்ளி விளையாட்டு மைதானத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தற்காக்கும் வகையில்  மூலிகை மருத்துவரை கொண்டு 42 வகையான மூலிகைகள் கொண்டு தயார் செய்யபடும் மூலிகை மருந்து பொதுமக்களின் முன்னிலையில் இடித்து இலவசமாக வழங்கபடவுள்ளது.

கால்நடை வளப்பவர்கள் மூலிகை மருந்தினை வாங்கி தங்களது கால்நடைகளுக்கு வழங்கலாம்.இத்தகவலை சீர்காழி ரோட்டரி சங்க தலைவர் எஸ்.கே.ஆர்.எஸ்.சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

**ராமநாதபுரத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

ராமநாதபுரம் மாவட்ட ஊராட்சி மன்ற கூட்ட அரங்கில் இம்மாதம் 15 ஆம் தேதி பிற்பகல் 2 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் ஆட்சியர் க.நந்தகுமார் தலைமையில் நடைபெற இருப்பதாகவும்,விவசாயிகளும்,விவசாயிகள்

சங்கப் பிரதிநிதிகளும் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறும் ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வலுவடைகிறது காற்றழுத்த தாழ்வுப் பகுதி: தமிழகத்தில் மழை வாய்ப்பு**

வங்கக் கடலில் அந்தமான் அருகே உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைந்து வருவதால், தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலில் அந்தமான் அருகே உருவாகியிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தீவிரம் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைந்துள்ளது.

இது மேலும் வலுவடைய வாய்ப்புள்ளது. இந்த தாழ்வுப் பகுதியால் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் மட்டுமே அடுத்த 2 நாள்களுக்கு மழை பெய்யும். அதன் பிறகு தாழ்வுப் பகுதி நகரும் திசையைப் பொருத்தே தமிழகத்தில் கனமழை பெய்ய வாய்ப்பு அமையும்.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ செவ்வாய்க்கிழமை பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் மேக மூட்டமாக காணப்படும்.

திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் தாமரைப்பாக்கத்தில் மட்டும் 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

வட கிழக்கு பருவமழை தொடங்கி 20 நாள்கள் கடந்துவிட்ட நிலையில், தமிழகத்தில் எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை. வங்கக் கடலில் இதுவரை 3 காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியபோதிலும் தமிழகத்துக்கு போதிய மழை கிடைக்கவில்லை. எனவே இந்த புதிய காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்துக்கு அதிக மழை கிடைக்க வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்ப்பார்ப்பு.

**உடல் ஆரோக்கியத்துக்கு இயற்கை உணவு: விழிப்புணர்வு பேனர் வைத்து அசத்தும் வேளாண்துறை**



உடல் நலத்தைப் பேணிக் காக்க பாரம்பரிய வேளாண் பொருள்களை உணவில் கடைபிடிக்கும்படி கிராம மக்களுக்கு விளம்பரப் பலகைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது வேளாண்துறை.

நாளுக்கு நாள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் செயற்கை உணவு வகைகளும், துரித உணவுகளும் அதிகளவில் கலந்து கொண்டே வருகிறது.

செயற்கை குளிர்பானங்கள் பரவலாக எல்லா பொது விழாக்களிலும் வழங்கப்படுகின்றன.

இவையெல்லாம் உடல் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை என்பதை அறிந்திருந்தாலும் அவை எளிதில் கிடைப்பதாலும், அதைத் தயாரிக்கும் நேரம் மற்றும் விருப்பம் போன்ற காரணங்களால் செயற்கை உணவு வகைகளும் மற்றும் குளிர்பானங்களும்  மக்கள் வாழ்வில் சற்று கூடுதலாகவே கலந்துவிட்டது.

செயற்கை உணவு வகைகளும், குளிர்பானங்களும் நம் வாழ்வில் தொடருமேயானால், குறைந்தபட்சமாக 30 வயது முதலே சர்க்கரை, ரத்த அழுத்தம், எலும்பு தேய்மானம், ரத்த சோகை, வயிறு சம்மந்தப்பட்ட நோய்கள், சிறுநீரகத்தில் கற்கள், ஆண்மைக் குறைவு என்று உடலின் எல்லா அங்கங்களும் வியாதிகளின் சரணாலயமாக மாறி மக்கள் பாதிப்புக்குள்ளாகி வருவதாக சுகாதாரத் துறை மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இதுபோன்ற நிலைத் தொடருமேயானால் எதிர்கால சந்ததியின் ஆரோக்கியம் மிகுந்த கேள்விக்குறியாகிவிடும் என்று சமூகநல ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர்.

நம் சமூகத்தில் இயற்கை உணவு பழக்கம் இருந்த வரை நோய்கள் நம்மை நெருங்கவே முடியவில்லை. கடந்த 30-40 ஆண்டுகளுக்கு முன் பழக்கத்தில் இருந்து வந்த இயற்கை உணவு முறை மீண்டும் நடைமுறைக்கு வர வேண்டும்.

தற்போது, உணவில் இயற்கை வேளாண் பொருள்கள் சேர்த்துக் கொள்வது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வேளாண் துறை களமிறங்கியுள்ளது.

இது தொடர்பான விளம்பரப் பலகைகள் மக்களின் பார்வைக்கு தற்போது வைத்துள்ளது. மாவட்டத்தில் உள்ள ஒன்றிய மற்றும் பேரூராட்சி அலுவலகங்களில் இந்த விழிப்புணர்வு பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் அந்த பலகையில் முடிஉதிர்வதைத் தடுத்தல், கேசம் பொலிவு பெற, சரும வியாதிகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள சிகைக்காய்களைப் பயன்படுத்தவும், கோடை வெயிலில் இருந்து தற்காத்துக் கொள்ள பருத்தி ஆடைகளை அணியவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இது தவிர, உடலுக்கு நீர்ச்சத்து பெறவும், ரத்த அழுத்தம், சிறுநீரக கற்கள் உருவாவதை தடுக்கவும் இளநீரைப் பயன்படுத்தவும்.

கேழ்வரகு, சோளம், கம்பு, தினை ஆகிய சத்துமிக்க சிறுதானிய வகைகளைப் பயன்படுத்தி எலும்புக்கு உறுதி, ரத்தத்தைத் தூய்மையாக்குதல், தசைகளை வலுப்படுத்துதல் மற்றும் மலச்சிக்கல் நீங்குதல் போன்ற பலன்களை பெறவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து சுகாதாரத் துறை மருத்துவர் கூறுகையில், "பாரம்பரிய உணவு வகைகளை அன்றாட வாழ்வில் மக்கள் அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கினால் அடிக்கடி மருத்துவர்களை நாட வேண்டிய அவசியம் இருக்காது. மேலும் நோய் எதிர்ப்பு சக்தியுடன் ஆரோக்கியமாக வாழலாம்' என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**12.11.2013**

## பயிர்கள் அடிப்படையில் விவசாய குழுக்கள் ஏற்படுத்த...முயற்சி! விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த முடிவு

திண்டுக்கல்:அனைத்து விளைபொருட்களுக்கான சாகுபடி பரப்பளவு, தமிழகத்தில் ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருவதால், விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பயிர்களின் அடிப்படையில் குழுக்களை அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெறவேண்டுமென்பதற்காக வேளாண் துறை சார்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அனைத்து பிரிவின் உயர் அதிகாரிகளும் களமிறக்கப்பட்டு விளைபொருள் உற்பத்தி தொடர்பான அறிக்கைகளை மாதந்தோறும் இயக்குனர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திண்டுக்கல் உட்பட வறட்சிக்கு இலக்கான சில மாவட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள் குறித்து அவ்வப்போது ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அனைத்து விளைபொருட்களுக்கான சாகுபடி பரப்பளவு தமிழகத்தில் ஆண்டுதோறும் குறைந்துவருவது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இதை தவிர்ப்பதற்காக பயிர்களின் அடிப்படையில் விவசாய குழுக்களை ஏற்படுத்தி அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு வேளாண் துறையின் வணிக பிரிவினருக்கு ஆலோசனை அளிக்கப்பட்டுள்ளது.

சாகுபடிக்கு முன்னதாக விவசாயிகளை சந்தித்து, சூழ்நிலைக்கேற்றவாறு பயிரை தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டுதலை மேற்கொள்ள வேண்டுமென்றும், அறுவடையின்போது சந்தையில் விளைபொருட்களுக்கு நிர்ணயிக்கப்படும் விலையை முன்னதாகவே ஊகித்து தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

## முயற்சி! தேனி மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடிக்கு அதிக விலைக்கு தோட்டக்கலை உறுதி

தேனி:தேனி மாவட்டத்தில், மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் தற்போதைய விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை அடைய வேண்டாம், அறுவடைக்கு பின் விலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளதாக,தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

திருப்பூர், கோவை, ஈரோடு மாவட்டங்களில் மஞ்சள் சாகுபடி அதிகளவில் இருந்தது. தேனி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரை மஞ்சள் சாகுபடி என்பதே இல்லை. அப்போது, மஞ்சளுக்கு கிராக்கி ஏற்பட்டு விலை அதிகரித்தது. இதன் பிறகே தேனி மாவட்ட விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்ய முயற்சிகள் மேற்கொண்டனர்.

தோட்டக்கலைத்துறையும் அவர்களுக்கு கை கொடுத்தது. தொடக்கத்தில் ஒருசிலர் மட்டும் சோதனை முறையில் சாகுபடி செய்தனர். விளைச்சலும் அதிகரித்து, விலையும் கிடைத்தது. இதன் பின் விவசாயிகள் மத்தியில் முயற்சிகள் அதிகரித்தது. தற்போது, நவீன தொழில் நுட்பங்கள் வந்துள்ள நிலையில், மஞ்சள் சாகுபடியை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது, பெரியகுளம், லட்சுமிபுரம், சித்தார்பட்டி, கன்னியப்பபிள்ளைபட்டி, டி.சுப்புலாபுரம் உட்பட மாவட்டத்தில் 500 ஏக்கருக்கும் அதிக பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விளைச்சலும் அதிகரித்துள்ள நிலையில் மஞ்சள் விலை சரிய தொடங்கி உள்ளது. ஒரு கிலோ மஞ்சள் கிழங்கு விலை தற்போதைய மார்க்கெட் நிலவரப்படி 60 ரூபாய் வரையே விற்கப்படுகிறது.

கிலோ 100 ரூபாய் வரை விற்றால் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்கும். தற்போதைய விலையில் லாபம் கிடைக்க வாய்ப்பு இல்லை. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். தேனி தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் கூறியதாவது:

மஞ்சள் அறுவடை தொடங்க இன்னும் மூன்று மாதங்கள் உள்ளன. மூன்று மாதங்களில் மஞ்சளின் தேவையும் அதிகரிக்கும். அப்போது தை மாதம் திருவிழா சீசனும் தொடங்கி விடும். தை பொங்கலை தொடர்ந்து வரும் மாதங்களில் அத்தனை கோயில்களிலும் விழாக்கள் நடைபெறும். எனவே மஞ்சள் தேவை

கூடும்.
விழாக்காலங்களில் மஞ்சள் விலை அதிகரிக்கும். எனவே விவசாயிகள் தற்போதைய விலை குறைவால் கவலைப்பட தேவையில்லை. அறுவடை நேரங்களில் சீசன் தொடங்கும், என்பதால் விலை கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளது, என்றார்.

## 5,000 கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி இயக்குனர் தகவல்

திருத்தணி:மர்ம நோய் தாக்கிய, 5,000 கால்நடைகளுக்கு, கால்நடை துறை, 14 மருத்துவ குழுக்கள் அமைத்து, தடுப்பு ஊசி போட்டு வருகிறது.
திருத்தணி கோட்டத்தில், திருத்தணி, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு மற்றும் திருவாலங்காடு ஆகிய ஒன்றியங்களில், ஆறு கால்நடை உதவி மருத்துவமனை, 19 கால்நடை மருந்தகங்கள் உள்ளன. இங்கு, 84 ஆயிரம் மாடுகள் உள்ளன.
இந்நிலையில், 'கோ மாரி' நோய் தாக்கி, மாடுகள் இறந்து வருவதால், விவசாயிகள் அச்சமடைந்து உள்ளனர்.
இது குறித்து, திருத்தணி கோட்ட கால்நடை துறை உதவி இயக்குனர் செல்லத்துரை கூறியதாவது:
'கோமாரி' தடுக்க, கோட்டத்தில், 84 ஆயிரம் தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. கடந்த ஒரு மாதத்தில், மட்டும், 5,000 கால்நடைகளை மர்ம நோய் தாக்கி உள்ளது. அந்த மாடுகளை தடுப்பு ஊசி போட்டு காப்பாற்றி உள்ளோம்.
இதுதவிர, 'கோமாரி' நோய் உள்ளதா எனவும், அதை தடுக்கும் வகையில், ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஆய்வாளர் மற்றும் ஒரு பராமரிப்பு உதவியாளர் என, மூன்று கொண்ட, 14 மருத்துவ குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.
இவர்கள், அந்தந்த பகுதியில் உள்ள கிராமங்களுக்கு சென்று, கால்நடைகளுக்கு சோதனை நடத்தி, தடுப்பு ஊசி மற்றும் மருந்துகள் வழங்குவார்கள் என, தெரிவித்தார்.

## மானிய விலையில் 1,718 வேளாண் கருவிகள் ரூ.1.74 கோடி நிதி ஒதுக்கீடு

திருவள்ளூர்:தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில், விவசாயிகளுக்கு, நடப்பு ஆண்டில், 1,718 வேளாண் கருவிகள், மானிய விலையில் வாங்க, 1.74 கோடி

ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

தமிழக அரசு, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம், 2013 - 14ம் ஆண்டு, திருவள்ளூர் மாவட்டத்திற்கு, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், வேளாண் கருவிகள் மானிய விலையில் வாங்க, நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதர விவசாயிகளுக்கு, 1,678 கருவிகளுக்கு, 1.57 கோடி ரூபாயும், இந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன விவசாயிகளுக்கு, 40 கருவிகளுக்கு, 17 லட்சம் ரூபாயும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

களையெடுக்கும் கருவிகள், சிறிய டிராக்டர், தெளிப்பான், சிறிய மற்றும் பெரிய, நெல் நடவு இயந்திரம், நெல் நாற்றங்கால் செய்யும் கருவி, பண்ணை கருவிகள், மட்டை வெட்டும் கருவி உள்ளிட்ட, வேளாண் கருவிகள், இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

திருவள்ளூர் மாவட்ட வேளாண் பொறியியல் துறை, செயற் பொறியாளர் கட்டுப்பாட்டில் உள்ள, உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களின் மூலம், கருவிகள் வாங்க, முன்னுரிமை அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு, கீழ்கண்ட உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களை அணுகவும் என, ஆட்சியர் வீர ராகவ ராவ், தெரிவித்து உள்ளார்.

உதவி செயற்பொறியாளர் அலுவலகங்கள்:

திருவள்ளூர்: என்.ஜி.ஓ.,காலனி, திருவள்ளூர். அலைபேசி: 94441 22744

பொன்னேரி: மாடர்ன் பள்ளி மாடி, 21, சக்தி நகர், ஆலாடு சாலை, பொன்னேரி. அலைபேசி: 94427 24363.

திருத்தணி: 376, ம.பொ.சி., சாலை, திருத்தணி. (திருவள்ளூர் அதிகாரி பொறுப்பு) அலைபேசி: 94441 22744.

## காக்கட்டான் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

கண்டமங்கலம் : கண்டமங்கலம் பகுதி விவசாயிகள் காக்கட்டான் பூ சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். கண்டமங்கலம் பகுதியில் குமளம், பி.எஸ்.

பாளையம், வாதானூர், மாத்தூர், பகண்டை, வாக்கூர், வெட்டியாம்பூண்டி, கணபதிபட்டு பகுதிகளில் விவசாயிகள் காக்கட்டான் பூ சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

பூசாகுபடி செய்யும் விவசாயிகள் செடிகள் பூக்கத்தொடங்கியதும் தொடர்ந்து 5 மாதங்கள்வரை அரும்புகளை பரித்து புதுச்சேரி, திண்டிவனம் பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு தொடர் மழையால் குண்டுமல்லி, முல்லை அரும்பு பூந்தோட்டங்கள் பாதித்ததால், காக்கட்டான் சாகுபடி செய்த விவசாயிகள் அதிக லாபம் கிடைத்தது. 1 கிலோ காட்டுமல்லி 250 ரூபாய் முதல் 300 ரூபாய்வரை விற்பனையானது. ஆனால் இந்த ஆண்டு கிலோ 70 ரூபாய் முதல் அதிகபட்சம் 150 வரையே விலை போவதால் விவசாயிகள் கலையடைந்துள்ளனர்.

## உழைப்புக்கு உலை வைக்கும் பறவைகள் சோளத்துக்கு பிளாஸ்டிக் கவர் பாதுகாப்பு

மேட்டூர்: பல நாள் பாடுபட்டு வளர்க்கும் மக்காச்சோளத்தை, பறவைகள் ஒரு மணி நேரத்தில் காலி செய்து விடுகின்றன. இதனால், பிளாஸ்டிக் கவர் போட்டு மூடி விவசாயிகள் சோளம் வளர்க்கின்றனர்.

மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியத்தில் காவிரி கரையோரம் பண்ணவாடி, மூலக்காடு, சின்னமேட்டூர், தெலுங்கனூர், கோட்டையூர் உள்பட ஏராளமான கிராமங்கள் உள்ளது. இப்பகுதி விவசாயிகள் பலர் தங்கள் நிலத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ளனர்.

மக்காச்சோளம் முதிர்ந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. மேட்டூர் அணை நீர்மட்டம், 80 அடிக்கு மேல் உள்ளது. இதனால், சுற்றுப்பகுதி பசுமையாக காணப்படுவதால், பல்வேறு பகுதிகளில் இருந்தும் கிளி, மைனா உள்ளிட்ட பறவை, அணை கரையோரம் முகாமிட்டுள்ளன.

இந்த பறவைகள் அணை கரையோர நிலங்களில் அறுவடைக்கு சில நாட்களே உள்ள மக்காச்சோள கதிர்களை கூட்டம், கூட்டமாக சென்று காலி செய்கிறது. விவசாயிகள் மூன்று மாதம் பாடுபட்டு வளர்த்த சோளக்கதிர்களை, ஒரு

மணிநேரத்தில் பறவைகள் காலி செய்து விடுகின்றன.

இதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகள் சமீபகாலமாக ஒவ்வொரு கதிர்களில் வளர்ந்துள்ள மக்காச்சோளத்தை பிளாஸ்டிக் கவர் போட்டு மூடி பாதுகாக்கின்றனர். இதனால், அணை கரையோர பகுதிகளில் வளர்ந்துள்ள சோளக்கதிர்கள் அனைத்திலும் பிளாஸ்டிக் கவர் போட்டு மூடியுள்ளது, அப்பகுதியில் செல்லும் சுற்றுலா பயணிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

## மழையை தொடர்ந்துபனிப்பொழிவால் காய்கறி விலை கிடுகிடு : கார்த்திகை மாதம் பிறப்பதால் மேலும் அதிகரிக்கும் அபாயம்

சேலம்: தமிழகத்தில் கடந்த வாரம் வரை, பெய்து வந்த வடகிழக்கு பருவமழையின் தாக்கம் சற்று குறைந்துள்ள நிலையில், பனிப்பொழிவு அதிகரித்துள்ளதால், மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் காய்கறிகளின் வரத்து சரிந்து, விலை உயர்ந்துள்ளது. கார்த்திகை மாதம் பிறக்க இன்னும் சில நாட்களே உள்ளதால், காய்கறி விலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படும் என, வியாபாரிகள் தெரிவித்தனர். சேலத்தில் இயங்கும் உழவர்சந்தை, மார்க்கெட்டுகளுக்கு பனமரத்துப்பட்டி, வாழப்பாடி, பாரப்பட்டி, நிலவாரப்பட்டி, ஓமலூர், சங்ககிரி, இடைப்பாடடி, மகுடஞ்சாவடி ஆகிய பகுதிகளில் இருந்தும், ஒசூர், ஊட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் இருந்தும் காய்கறி விற்பனைக்கு வருவது வழக்கம்.

தமிழகத்தில் கடந்த வாரம் வரை, பெய்து வந்த வடகிழக்கு பருவமழை காரணமாக, விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி இருந்தது. காய்கறிகளை பறிக்க முடியாத நிலை ஏற்பட்டதோடு, தண்ணீர் தேக்கத்தால் காய்கறிகள் அழுகி விட்டன.

தற்போது மழையின் தாக்கம் குறைந்துள்ள நிலையில், விளைநிலங்களில் தேங்கிய தண்ணீரும் வடிந்து வருகிறது. இந்நிலையில், காலை, இரவு நேரங்களில், பனிப் பொழிவின் தாக்கம் அதிகரித்துள்ளதால், காய்கறி அறுவடை பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், மார்க்கெட், உழவர்சந்தைகளுக்கு விற்பனைக்கு வரும் காய்கறிகளின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த சரிவால், உள்ளூர் காய்கறிகளான

தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், புடலங்காய், அவரைக்காய் ஆகியவற்றின் விலை, கிலோவுக்கு, நான்கு ரூபாய் முதல், பத்து ரூபாய் வரை, உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் தக்காளி கிலோ, 25 ரூபாய்க்கு விற்றது, 29 ரூபாயாகவும், கத்தரிக்காய், 20 ரூபாய்க்கு விற்றது, 28 ரூபாயாகவும், வெண்டைக்காய், ஆறு ரூபாய்க்கு விற்றது, 14 ரூபாயாகவும், பீர்க்கங்காய், புடலங்காய், பாகற்காய், கொத்தவரைக்காய் ஆகியன தலா கிலோ, 10 ரூபாய்க்கு விற்றது, 14 ரூபாயாக உயர்ந்துள்ளது.

உள்ளூர் காய்கறிகளின் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதை அடுத்து, வெளியூர் காய்கறிகளின் விலையிலும் உயர்வு ஏற்படும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

நேற்றைய நிலையில் வெளியூர் காய்கறிகளின் விலை நிலவரம்:

சின்னவெங்காயம் கிலோ, 64 ரூபாய், கேரட், 46 ரூபாய், பீட்ரூட், 20 ரூபாய், பீன்ஸ், 36 ரூபாய், முட்டைகோஸ், 22 ரூபாய், உருளை கிழங்கு, 40 ரூபாய், நூல்கோல், 24 ரூபாய், பெரிய வெங்காயம், 56 ரூபாய்க்கு விற்கிறது. இந்த விலை இன்னும் சில நாளில், கிலோவுக்கு, மூன்று ரூபாய் முதல், ஏழு ரூபாய் வரை உயரும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

இன்னும் சில நாளில் கார்த்திகை மாதம் பிறக்கிறது. இதனால், காய்கறிகளின் தேவையும் அதிகரிக்கும். தற்போது உள்ள நிலையில் வரத்து தொடர்ந்து சரிவை சந்தித்து வருவதால், காய்கறி விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளது, என்றார்.

### தமிழகம், கேரளாவில் முட்டை விலை 385 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 385 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருவது, பண்ணையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள்

விவாதித்தனர். அதையடுத்து, 381 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, நான்கு காசுகள் அதிகரித்து, 385 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது, நுகர்வு அதிகரித்து வருவதால், முட்டை விலையும் உயர்ந்துள்ளது. முட்டை விலை, தொடர்ந்து உயர்ந்து வருவது, பண்ணையாளர்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 375, பெங்களூரு, 370, மைசூரு, 370, ஹைதராபாத், 364, மும்பை, 396, விஜயவாடா, 359, கோல்கத்தா, 415, பர்வாலா, 386, டில்லி, 401.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 61 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அதன் விலை, இரண்டு ரூபாய் உயர்த்தப்பட்டு கிலோ, 47 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### வட மாநிலங்களின் தேவையால்முட்டை விலை மேலும் உயரும்

நாமக்கல்:வட மாநிலங்களில் குளிர் காலம் துவங்கியுள்ளதால், முட்டைக்கான தேவை அதிகரித்து, அதன் விலை உயர வழி வகுத்துள்ளது.கோல்கட்டா, கோரக்பூர் மண்டலத்தில், முட்டை விலை, 405 காசு வரை உயர்ந்துள்ளது. அதனால், நாமக்கல் மண்டலத்திலும், விலையை உயர்த்த, ‘நிக்’ (தேசிய முட்டை ஒருங்கிணைப்பு கமிட்டி) திட்டமிட்டுள்ளது.தேசிய அளவில், 24 முட்டை மண்டலங்கள் செயல்படுகின்றன. தினசரி நுகர்வு, ஏற்றுமதி ஆகியவற்றை கணக்கில் கொண்டு, சம்பந்தப்பட்ட முட்டை மண்டல கமிட்டி மூலம், விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

முட்டை உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் கூடிப் பேசி, முடிவு செய்து, அதன் அடிப்படையிலேயே, முட்டை கொள்முதல் விலை அறிவிக்கப்படுகிறது.தற்போது

குளிர் காலம் துவங்கிஉள்ளதால், வட மாநில மக்களிடையே முட்டையின் நுகர்வு அதிகரித்துள்ளது. இதனால், அதன் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.முட்டை விலை உயர்ந்து வருவதால், அதற்கு இணையாக, தமிழகம் மற்றும் கேரளாவிலும், முட்டை விலையை உயர்த்த, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின், நாமக்கல் மண்டல கமிட்டி ஆர்வம் காட்டி வருகிறது.வியாபாரிகளுக்கு, பண்ணை விலையில் இருந்து குறைத்துக் கொடுக்க வேண்டாம். என, குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் மூலம், பண்ணையாளர்களுக்கு தகவல் அனுப்பி வருகிறது.இதுகுறித்து பண்ணையாளர்கள் சிலர் கூறியதாவது: நாமக்கல், நிக் நிர்ணயிக்கும் கொள்முதல் விலையின் படி, வியாபாரிகள், பண்ணையாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்வதில்லை.குறிப்பாக, பெரும் பண்ணையாளர்கள், தங்களின் அதிகப்படியான உற்பத்தி யால், மொத்தமாக ஆர்டர் தரும் வியாபாரிகளிடம், முட்டைகளை சப்ளை செய்து விடுகின்றனர்.அதுவும், நிக் நிர்ணயிக்கும் பண்ணை விலையைக் காட்டிலும், குறைத்து விற்கின்றனர். அதனால், சிறு பண்ணையாளர்கள் பாதிக்கப் படுகின்றனர். இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**12.11.2013**

## பாசன வாய்க்கால் கரைகள் விவசாயிகள் பராமரிப்பு

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் அருகே ஷண்டன் தொட்டி மதகு பகுதியில் வடவாற்றிலிருந்து பாசனம் பெரும் விளை நிலங்கள் அதிக பரப்பில் உள்ளது. விளை நிலங்களுக்கு இடையே பாசன வாய்க்கால்கள் அதிக எண்ணிக்கையில் செல்கிறது.

வடவாற்றிலிருந்து பிரியும் கிளை வாய்க்கால் மற்ற வாய்க்கால்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த பகுதியில் வாய்க்கால் மூலம் பாசனம் பெற்று விவசாய பணிகள் நடைபெறுவது சிறப்பம்சமாகும்.

இதனால் வாய்க்கால்களுக்கு அதிக முக்கியத்துவத்தை விவசாயிகள் கொடுத்து வருகின்றனர். கோடை காலங்களில் வாய்க்கால்கள் சரிவர பராமரிக்கப்படாமல் உள்ளது. இதன் காரணமாக பாசன காலங்களில் வாய்க்கால்களின் கரைகள் உடைந்து தண்ணீர் வயல்வெளிகளுக்கும், மழை காலங்களில் வாய்க்காலிலிருந்து அதிக அளவு தண்ணீர் வயல்களுக்கும் சென்று விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

இதை கருத்தில் கொண்டு விவசாயிகள் தாங்களாகவே உடைந்த கரைகளை சாக்கு மூட்டைகளில் மணலை நிரப்பி அடைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக தங்களுடைய விளை நிலங்கள் பயிர் செய்யும் காலங்களில் பாதுகாக்கப்படுவதாக கூறுகின்றனர்.

## உற்பத்தி திறனை பெருக்க 7 தொழில்நுட்பங்கள் வேளாண்மை இணை இயக்குனர் பேச்சு

சின்னமனூர், : விவசாயத்தொழிலில் உற்பத்தி திறனை பெருக்கிட 7 தொழில் நுட்பங்களை பின்பற்ற வேண்டும் என முகாமில் வேளாண்மை இணை இயக்குனர் பேசினார்.

சின்னமனூர் அருகே காமாட்சிபுரத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயறுவகை குழும விவசாயிகள் பயிற்சி சென்டெக்ட் விவசாயிகள் பயிற்சி மையத்தில் நடந்தது.
முகாமிற்கு தேனி வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம் தலைமை வகித்தார். காமாட்சிபுரம் பஞ்சாயத்து தலைவர் சொக்கர்செல்வம், சீப்பாலக்கோட்டை பஞ்சாயத்து தலைவர் பழனிச்சாமி, காமாட்சிபுரம் பஞ்சாயத்து துணைத்தலைவர் செல்வி முன்னிலை வகித்தனர். திட்டம் பற்றி சின்னமனூர் வேளாண்மை உதவி இயக்குனர் அழகுநாகேந்திரன் விளக்கினார். விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு சின்னமனூர் உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்ச்செல்வி செயல் விளக்கம் காண்பித்தார்.
வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம் பேசுகையில், உணவு உற்பத்தியில் பற்றாக்குறை நீடித்து வருவதால் அதனை பெருக்கிட அரசு முனைப்புடன் செயல்படுகிறது. அதற்காக உணவு தானிய உற்பத்தியில் பயறுவகைப் பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. அதனால் தரமான விதைகள் தேர்வு செய்து விதை நேர்த்தி பயிர் எண்ணிக்கை பராமரிப்பு, நுண்ணீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம், டிஏபி கரைசல் (2 சதவீத கரைசல்) பூக்கும் தருணத்தில் தெளித்தல் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் ஆகிய 7 தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டியது அவசியம்.
அதன்படி செய்தால் அதிகமான மசூல் பெறலாம். உற்பத்தி திறனை பெருக்கி பற்றாக்குறை யினை சமாளித்து விட லாம். முன் உதாரணமாக சின்னமனூரில் முதல் போகத்தில் நெல் அறு வடை நடக்கும் தருணத்தில் ஒரு ஏக்கருக்கு 60 கிலோ எடை கொண்ட நெல் மூடைகள் 55 திலிருந்து 60 வரையில் கிடைத்துள்ள மகிழ்ச்சியை உங்களிடத்தில் தெரிவித்தாக வேண்டும் என்றார். முகாமிற்கு சீப்பாலக்கோட்டை, காமாட்சிபுரம், கள்ளபட்டி, எரக்கோட்டைபட்டி, சுக்காங்கல்பட்டி, ஓடைப்பட்டி ஆகிய பகுதிகளின் விவசாயிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர். விவசாயிகளுக்கு ஊக்கத்தொதையாக தென்னங்கன்றுகள் தலா 4 வீதம் வழங்கினர்.
முகாமில் தேனி வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயபாண்டியன், சென்டெக்ட்

திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து, வேளாண்மை விதை சான்று அலுவலர் ராஜகுரு, வேளாண்மை அலுவலர் இளம் பூரணர், துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, உதவி வேளாண் மை அலுவலர்கள் பன்னீர்செல்வம், கணேசன், ஜனகிராமன், அம்மா திட்ட அலுவலர்கள் விஜயகுமார், தவமணி, வினோத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

**மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் வெங்காயம்... விலை பெருஞ்சோகம் கிலோ ரூ.80க்கு விற்பனை**

மதுரை, : மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் வரத்து குறைவால் சின்ன வெங்காயம் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் கிலோ ரூ.80க்கு விற்கப்படுகிறது.

மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் நேற்றைய விலை நிலவரம் (கிலோ, ரூபாயில்): நாட்டு தக்காளி - 30, கத்தரிக்காய் - 25, வெண்டைக்காய் - 20, பல்லாரி - 50, சின்ன வெங்காயம் - 80, உருளைக்கிழங்கு - 30, சேப்பங்கிழங்கு - 40, கருணை - 40, கேரட் - 30, பீட்ரூட் - 20, பட்டர்பீன்ஸ் - 80, சோயாபீன்ஸ் - 60, பச்சை பட்டாணி - 140, முருங்கை பீன்ஸ் - 40, நூக்கல் - 15, முள்ளங்கி - 15, அவரை - 50, மிளகாய் - 25, சுரைக்காய் - 15, சவ்சவ் - 15, சீனி அவரைக்காய் - 15, வெள்ளைபூசணி - 15, சர்க்கரை பூசணி - 15, கருவேப்பிலை - 25, கொத்தமல்லி - 30, புதினா - 15, காலிபிளவர் - 20, பீர்க்கங்காய் - 25, முட்டைக்கோஸ் - 20, புடலங்காய் - 15, பெரிய பாகற்காய் - 25, இஞ்சி - 70, பச்சை மொச்சை - 50, கீரை வகைகள் 15. காய்கறி மொத்த வியாபாரி சேதுபதி கூறுகையில், 'கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக வெங்காயம் வரத்து குறைந்துள்ளதால் அதன்விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் உள்ளது.

கடந்த வாரம் வரை கிலோ ரூ.70க்கு விற்கப்பட்ட சின்ன வெங்காயம் தற்போது கிலோ ரூ.80ஆக உயர்ந்துள்ளது' என்றார்.

**நெல் பயிரில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை வேளாண் உதவி இயக்குனர் ஆலோசனை**

காரைக்குடி, : நெல் பயிரில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை குறித்து கல்லல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கணேசன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.
கல்லல் ஒன்றியத்துக்கு உட்பட்ட விவசாய நிலங்களில் நேரடி விதைப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பயிர்களில் இலை சுருட்டுப் புழு மற்றும் ஆனைக்கொம்பன் ஈ தாக்குதல் அதிக அளவில் உள்ளதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர். இதனை கட்டுப்படுத்தும் விதம் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் கணேசன் கூறுகையில்.
பிப்ரோனிக் குருணை மருந்து 10 கிலோவை 20 கிலோ மணலுடன் கலந்து தெளித்தால் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். மேலும் நேரடி நெல் விதைப்பு பயிரில் சிங்க் சல்பேட் சத்து குறைபாடு உள்ளது. இக் குறைபாட்டினை போக்க ஏக்கருக்கு 10 கிலோ சிங்க் சல்பேட்டினை நன்கு மக்கிய குப்பை அல்லது 10 கிலோ மணலுடன் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் ஆலோசனைகள் மற்றும் மானியவிலையில் உரம் தேவைக்கு கல்லல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**வாடும் பயிரை காப்பாற்ற இறவை மூலம் தண்ணீர் பாய்ச்சும் விவசாயிகள்**

திருப்புவனம் : வாடும் பயிரை காப்பாற்ற இறவை மூலம் தண்ணீர் பாய்ச்சுகின்றனர் திருப்புவனம் பகுதி விவசாயிகள். திருப்புவனம் அருகே சொக்கநாதிருப்பு உள்ளிட்ட கிராமங்களில் வாடும் பயிரை காப்பாற்ற ஏற்றம் மூலம் தண்ணீர் இறைப்பில் ஈடுபட்டுள்ளனர் விவசாயிகள். ஆகஸ்ட் கடைசி வாரத்தில் நடவு பணிகளை தொடங்கும் விவசாயிகள் ஜனவரி முதல் வாரத்தில் அறுவடை செய்து விடுவார்கள். ஆனால் தற்போது பருவமழை தவறி பெய்ததால் நடவு பணியை விவசாயிகள் இப்போதுதான் ஆரம்பித்துள்ளனர். மின் மோட்டார் மற்றும் கிணற்று பாசனம் இல்லாததால் கை இறவை மூலம் நீர் பாய்ச்சுகின்றனர். சொக்கநாதிருப்பு, பனையனேந்தல்உள்ளிட்ட கிராமங்களில் இறவை மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 24 மணி நேரமும் தண்ணீர் இறைத்தால்தான் வயல் நிரம்பும். கூலித் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 400 முதல் 500 ரூபாய் வரை கூலி கேட்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.


இது தவிர தற்போது கண்மாய்களில் 10 நாட்களுக்கு உரிய நீர்தான் உள்ளது. அடுத்த சில தினங்களில் மழை பெய்தால் மட்டுமே விவசாயம் செழிக்கும். சொக்கநாதிருப்பை சேர்ந்த கிருஷ்ணன் என்ற விவசாயி கூறும் போது,

இங்கு நிலத்தடி நிர்மட்டம் குறைவு. மழை பெய்தால் கணம்ய் நிரம்பும். சமீபத்தில் கண்மாயை தூர் வாரியதால் மழை காரணமாக தண்ணீர் தேங்கியுள்ளது. அதனை நம்பி நடவு செய்துள்ளோம். ஏற்றம் மூலமாகத்தான் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் ஏக்கருக்கு நான்கு பேர் சேர்ந்து தண்ணீர் இறைத்தால்தான் வயல் நிரம்பும், கூலி தொழிலாளர்கள் 400 ரூபாய் கூலி கேட்கின்றனர் என்றார்.

அல்லிநகரத்தைச் சேர் ந்த ஆறுமுகம் கூறுகையில்

மழை பெய்தால் கண்மாயில் தண்ணீர் தேங்கும், பெய்த மழையை நம்பி நடவு செய்துள்ளோம், மோட்டார் வைத்திருப்பவர்களை நம்பி அடுத்த பணியை பார்க்க வேண்டும், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டபடியால் மோட்டார் வைத்திருப்பவர்களுக்கே தண்ணீர் பற்றாக்குறை உள்ளது என்றார். மழை அளவு நகர்ப்புறத்தில் மட்டுமே கணக்கெடுக்கப்படுகிறது. ஆனால் கிராமப்புறங்களில் அந்தளவு மழை பெய்யவில்லை என்பதுதான் உண்மை. அரசு அதிகாரிகளின் கணக்குப்படி பார்த்தால் திருப்புவனம் வட்டாரத்தில் உள்ள அனைத்து கண்மாய்களும் நிரம்பி விவசாயிகள் நடவுப்பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் விவசாய பணிகள் மூன்றில் ஒரு பங்கு குறைந்துள்ளது. எனவே அதிகாரிகள் கிராமப்புற பகுதிகளில் பெய்யும் மழையளவையே அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாயிகள் அதிர்ச்சி தள்ளுபடி செய்த விவசாய கடனை செலுத்த நோட்டீஸ்**



வி.கே.புரம்: நெல்லை மாவட்டம் விகேபுரம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடந்த 2006ம் ஆண்டு அப்பகுதியை சேர்ந்த பல விவசாயிகள் கடன் வாங்கினர். வி.கே.புரம் கட்டபுளி தெருவில் வசிக்கும் வேலாயுதம் என்பவர் 2006ம் ஆண்டு அங்குள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் 20 ஆயிரம் விவசாயக் கடன் பெற்றார். 2008 வரை தவணை முறையில் கடனை செலுத்தி வந்தார்.இதற்கிடையில் 2007ம் ஆண்டு வரை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய பயிர் கடன்களை 2008ம் ஆண்டு தள்ளுபடி செய்து மத்திய அரசு அறிவித்தது. இதனால் வேலாயுதம் மீதமுள்ள தொகையை செலுத்தவில்லை. இந்நிலையில் பயிர் கடனுக்கான பெற்ற தொகை 20 ஆயிரத்துக்கு வட்டியுடன் சேர்த்து 49 ஆயிரம் செலுத்துமாறும், இது தொடர்பாக வரும் 19ம் தேதி அம்பை நீதிமன்ற வளாகத்தில் உள்ள சட்ட உதவி மையத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்றும் நெல்லை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் வேலாயுதம் பெயருக்கு கடிதம் வந்தது.இவரை போல் வி.கே.புரம் பகுதியை சேர்ந்த பல விவசாயிகளுக்கு கடன் தொகையை செலுத்துமாறு கடிதம் வந்ததால் அவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**உற்பத்தி செலவு அதிகரிப்பால் முட்டை விலை உயர்வு**



நாமக்கல்: தீபாவளிக்கு முன்பும், பின்னரும் தொடர்ச்சியாக முட்டை விலை ஏற்றம் கண்டு வருகிறது. வழக்கமாக விற்பனை நிலவரங்களை மதிப்பீடு செய்து வாரத்திற்கு ஒரு முறை அல்லது அதிகபட்சமாக இரண்டு முறை விலை நிர்ணயம் செய்யப்படும். கடந்த சில வாரங்களாக வாரத்தில் மூன்று அல்லது நான்கு முறைக்கு மேல் முட்டை விலையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. தீபாவளிக்கு முன்பாக அக்டோபர் 25ம் தேதி 361 பைசாவாக இருந்தது. நேற்று கொள்முதல்

விலை 385 பைசாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இடைப்பட்ட நாட்களில் இந்த மாதம் 1ம் தேதி 370 ஆகவும், 4ம் தேதி 376 ஆகவும், 8ம் தேதி 381 பைசாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.ஆனால், நிர்ணயிக்கும் விலையை காட்டிலும் குறைந்த விலைக்கு தான் கொள்முதல் செய்யப்படுவதாக பண்ணையாளர்கள் கூறுகின்றனர். பண்ணையாளர்கள் கூறுகையில், கடந்த இரு மாதமாக வியாபாரிகள் 40 முதல் 50 காசுகள் வரை குறைத்து முட்டை வாங்கி செல்கின்றனர்.

முட்டை விலை உயர்வு குறித்து தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் சங்கத் தலைவர் நல்லதம்பி கூறியதாவது:கடந்த ஆண்டை காட்டிலும் 10 சதவீத முட்டை உற்பத்தி  குறைந்துள்ளது. 20வது வாரத்தில் ஒரு கோழி முட்டையிடுகிறது. அதுவரை அந்த கோழிக்கு ரூ.200 ருபாய் வரை செலவாகிறது. 72 வாரம் வரை கோழி முட்டை தொடர்ந்து இடுகிறது. பண்ணையில் இருந்து முட்டை எடுத்து, வெளியே கொண்டு செல்ல ஒரு முட்டைக்கு 30 காசு ஆகிறது. முட்டை சேதாரம் அதிகம் ஏற்படுகிறது. முட்டைகளை லாரிகளில் ஏற்ற ஆட்கள் கூலியும் அதிகரித்துவிட்டது. தீவனமூலப்பொருட்கள் விலை குறையவில்லை.மக்காசோளம் 100 கிலோ 1500 ரூபாயாக உள்ளது. ஒரு டன் சோயா ரூ.36 ஆயிரமாக உள்ளது. இப்படி பல பிரச்னைகள் தொழிலில் உள்ளன. தற்போது முட்டை விலை 385 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டாலும் பண்ணையாளருக்கு 340 காசுகள் வரை தான் கிடைக்கிறது. எனவே, முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 4 ரூபாய்க்கு மேல் உயர்ந்தால் தான் பண்ணையாளர்கள் நஷ்டமின்றி தொழில் செய்ய முடியும். இவ்வாறு நல்லதம்பி தெரிவித்தார்

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**12.11.2013**

## தொழில்நுட்பங்களை, விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் வேளாண்மை அதிகாரி வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : Nov 12 | 12:49 am



அரிமளம் ஒன்றியம், கீழப்பனையூரில் நடந்த அனைத்து துறை அலுவலர்களுக்கான அறிமுக கூட்டத்தில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜகான் பேசிய போது எடுத்த படம்.

அரிமளம் குறைந்த நீரை பயன் படுத்தி அதிக மகசூல் பெறும் தொழில் நுட்பங் களை, விவசாயிகள் பயன் படுத்திக்கொள்ள வேண் டும் என்று வேளாண்மை அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**<u>அறிமுக கூட்டம்</u>**

அரிமளம் ஒன்றியம் கீழப் பனையூர் ஊராட்சி கீழப் பனையூர் கிராமத்தில் தமிழக அரசின் நீர்வள, நிலவள திட்ட முன்மாதிரி கிராம அனைத்துத் துறை அலுவலர் களுக்கான அறிமுக கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு வே ளாண்மை உதவி இயக்கு னர் உதயக்குமார் தலைமை தாங்கினார். வேளாண்மை பொறியியல்துறை கண்ணன் முன்னிலை வகித்தார். கூட் டத்தில் வேளாண்மை இணை இயக் குனர்

ஷாஜகான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். அப் போது அவர் கூறியதாவது;-

**முன்னோடி கிராமம்**

தமிழக அரசின் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் முன்மாதிரி கிராமமாக கீழப் பனையூர் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்தக் கூடிய 8 துறை அலுவலர் களின் அறிமுக கூட்டம் நடை பெற்றது. இந்த திட்டம் மூலம் இந்த கிராமத்தை முன்னோடி கிராமமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக குறைந்த நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறும் தொழில்நுட்பங்களும், வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் அதிகாரி கள் தொடர்ந்து கூட்டங்கள் மூலம் தெரிவிப்பார்கள். இதை இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், விவசாயிகள் நல்லமுறையில் பயன்படுத்த கேட்டுக்கொள்கிறேன். இவ் வாறு அவர் பேசினார். கூட்டத்தில் தோட்டக் கலைத்துறை ராஜேந்திரன், வேளாண் பொறியியல் துறை ரமேஷ், வேளாண்மை அலுவலர் கருப்பையா, முன் னோடி விவசாயி கீழப்பனையூர் ராமசாமி, கால்நடை டாக்டர் ஆனந்தன், வேளாண் வணிகம் ராதா கிருஷ்ணன் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நடப்பு சந்தை பருவத்தில் பருத்தி ஏற்றுமதி 90 லட்சம் பொதிகளாக குறையும்**

பதிவு செய்த நாள் : Nov 12 | 01:33 am



2013–14–ஆம் ஆண்டு சந்தை பருவத்தில் (ஆகஸ்டு – ஜூலை) பருத்தி ஏற்றுமதி ஒன்பது சதவீதம் குறைந்து 90 லட்சம் பொதிகளாக சரிவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற சந்தை பருவத்தில் (2012–13) 99 லட்சம் பொதிகளாக இருந்தது.

சீனா, வங்காளதேசம் மற்றும் வியட்நாம் ஆகிய அண்டை நாடுகள் இந்தியாவின் முக்கிய பருத்தி ஏற்றுமதி சந்தையாக உள்ளன. தற்போது சீனாவில் தேவைப்பாடு குறைவாக உள்ளது. மேலும் கடந்த சில மாதங்களாக இந்திய பருத்தி விலை சர்வதேச விலையை விட அதிகமாக உள்ளது. எனவே நடப்பு சந்தை பருவத்தில் பருத்தி ஏற்றுமதி மதிப்பீட்டின் படி எவ்வித மாற்றமின்றி 90 லட்சம் பொதிகளாகவே இருக்கும். இருப்பினும் தேவை அதிகரித்தால் ஏற்றுமதி அதிகரிக்கும் என அமெரிக்க விவசாய துறை தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் 4.93 லட்சம் பொதிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ எடை கொண்டதாகும். தற்போது சந்தைக்கு பருத்தி வரத்து அதிகரித்துள்ளதால் உள்நாட்டில் விலை குறைய தொடங்கியுள்ளது.

சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நடப்பு ஆண்டில் பருத்தி உற்பத்தி இதுவரை இல்லாத அளவிற்கு 3.72 கோடி பொதிகளாக அதிகரிக்கும் என அமெரிக்க விவசாய துறை கூறியுள்ளது. இது சென்ற ஆண்டில் 2.95 கோடி பொதிகளாக இருந்தது.